கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம்,
வடக்குத்து ஊராட்சி மன்றத்தலைவர்
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. K. அஞ்சலை

தீர்மான எண்: 40/2024 நாள்: 29.02.2024

பொருள்: உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – கடலூர் மாவட்டம் – குறிஞ்சிப்பாடி வட்டம் – குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் – வடக்குத்து ஊராட்சி – சர்வே எண். 456/1A6A இடத்தில் 0.4850 ஏக்கர் (அ) 1964.00 சதுர மீட்டர் – பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் – வழங்குதல் குறித்து.

பார்வை:

1. திரு.ஜி.பாலு, நெ.12, வனமயில் நகர்,வடக்குத்து,குறிஞ்சிப்பாடி தாலுக்கா,கடலூர்– 607308அவர்களின் விண்ணப்பம்
2. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம் அவர்களின் கடிதம் இணைய தள வாயிலாக ROC No.8UDWJOWR/2023/2023/TCP நாள்: 21.11.2023
4. சார்பதிவாளர், பதிவுத்துறை, வடலூர் சார்பதிவாளர் அலுவலகம், ஆவண எண். 3505/2023 மற்றும் 3506/2023, நாள்: 26.09.2023
5. கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது. Indian Bank Payment Receipt நாள்:23.02.2024 நில பயன் மாற்றுக்கட்டணம் செலுத்து ரசீது Indian Bank E-Challan No.20240223003174 நாள்: 23.02.2024

****

உத்தரவு:–

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – கடலூர் மாவட்டம் – குறிஞ்சிப்பாடி வட்டம் – குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் – வடக்குத்துஊராட்சி, கிராமம் சர்வே எண். 456/1A6A இடத்தில் 0.4850 ஏக்கர் (அ) 1964.00 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 3–ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3)–ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைப்படம் இசைவு வழங்கப்பட்டது.

பார்வை 4–ல் சுட்டிய படி சாலை மூலைமுடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானப்பத்திர ஆவண எண். 3505/2023, நாள்: 26.09.2023–ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை பார்வை 5–ல் சுட்டியபடி கூராய்வு கட்டணம் மற்றும் நில பயன்மாற்று கட்டணம் செலுத்தப்பட்டு உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி வடகுத்துஊராட்சி மன்ற தீர்மான எண். 40/2024 என எண்ணிடப்பட்டு அசல் வரைப்படங்கள் மற்றம் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரபதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்புரிவு வரைபடத்தின் படி உள்ளாட்சி சட்டங்களின் சடி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும், பொது துறையில் இருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் இடம் வரை அணுகு சாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப்பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
3. நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் அலுவலகம் அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.
4. சாலையின் இருபுறங்களிலும் 10–அடி தூரத்திற்கு ஒன்று மரம் நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
5. மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு எப்போது வேண்டுமாலும் இரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வடகுத்துஊராட்சி, கிராமம் சர்வே எண். 456/1A6A – இடத்தில் 0.4850 ஏக்கர் (அ) 1964.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு வடக்குத்து ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இணைப்பு: வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

திருமதி. K. அஞ்சலை
ஊராட்சி மன்றத் தலைவர்,
வடக்குத்து ஊராட்சி,
குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம்,
குறிஞ்சிப்பாடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

தலைவர்
வடக்குத்து ஊராட்சி
குறிஞ்சிப்பாடி ஒன்றியம்

பெறுநர்:

திரு.ஜி.பாலு,
நெ.12, வனமயில் நகர்,
வடகுத்து,
குறிஞ்சிப்பாடி தாலுக்கா,
கடலூர்– 607308

நகல்: நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
நகல்:வட்டார வளர்ச்சி அலுவலர், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.
நகல்:சார் பதிவாளர், வடலூர் அவர்களுக்கு தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
நகல்:வட்டாட்சியர், அவர்களுக்கு தகவலுக்கு அனுப்பப்படுகிறது